இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களுக்குரியப் பணியில் உங்கள் ஊழியத்தைத் தொடரும் இவ்வேளையில், தந்தைக்குரிய எனது பாசத்தைத் தெரிவிப்பதிலும், மனமகிழ்ந்து உங்களை ஊக்குவிப்பதிலும் நான் பெரிதும் மகிழ்வடைகிறேன்."

# திருஅவையின் ஒன்றிப்புக்காக இறைவேண்டல் செய்ய திருத்தந்தை பதினான்காம் லியோ அழைப்பு


திருத்தந்தை பதினான்காம் லியோ (ANSA)

அருள்பணியாளர்களின் யூபிலி விழாவை முன்னிட்டு பிரான்சின் பாரிஸ் நகரிலுள்ள Notre-Dame பேராலயத்தில் கூடியுள்ள ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்களுக்கு ஜூன் 6, இவ்வியாழனன்று அனுப்பியுள்ள செய்தியொன்றில் திருத்தந்தை பதினான்காம் லியோ "உங்களிடையே அருள்பணித்துவ சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்ளவும், உங்கள் ஆயர்களுடனான நெருங்கிய அன்பின் பிணைப்பைப் பராமரிக்கவும், திருஅவையின் ஒன்றிப்புக்காக இடைவிடாமல் இறைவேண்டல் செய்யவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன்" என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

"உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களுக்குரியப் பணியில் உங்கள் ஊழியத்தைத் தொடரும் இவ்வேளையில், தந்தைக்குரிய எனது பாசத்தைத் தெரிவிப்பதிலும், மனமகிழ்ந்து உங்களை ஊக்குவிப்பதிலும் நான் பெரிதும் மகிழ்வடைகிறேன்" என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை."நீங்கள் அடிக்கடி சந்திக்கும் சவாலான மற்றும் கடினமான திருஅவை மற்றும் சமூக சூழ்நிலைகளுக்கு மத்தியில் இந்தப் பணியை நிறைவேற்ற, உங்களைத் தம்முடைய நண்பர்கள் என்று அழைத்து, என்றென்றைக்கும் தம்முடன் ஒன்றிணைத்த இயேசுவின் மீது ஆழமான, தனிப்பட்ட மற்றும் உண்மையான அன்பில் உங்கள் வாழ்க்கையையும் பணியையும் நிலைநிறுத்த நான் உங்களை ஊக்குவிக்கிறேன்" என்றும் உரைத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

"மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அடிக்கடி மற்றும் நெகிழ்ச்சியுடன் வலியுறுத்தியது போல, நெருக்கம், இரக்கம், மென்மை, பணிவு மற்றும் எளிமை வழியாக வெளிப்படுத்தப்படும் உங்கள் சமூகங்களுக்கான தாராளமான மற்றும் நிபந்தனையற்ற பக்தியால் இந்த அன்பு பொருந்தட்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

"இந்த வழியில், நீங்கள் இன்னும் புனிதர்களாக இல்லாவிட்டாலும், நம்பகத்தன்மைகொண்ட சாட்சிகளாக இருப்பீர்கள், தொலைவில் இருப்பவர்களின் இதயங்களைத் தொடுவீர்கள், அவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள், மேலும் அவர்களை இயேசுவுடனான சந்திப்பிற்கு இட்டுச் செல்வீர்கள்" என்றும் விளக்கியுள்ளார் திருத்தந்தை. Presbyterorum Ordinis எனப்படும் அருள்பணியாளர்களின் ஊழியம் மற்றும் வாழ்க்கை குறித்த ஆணையின் 60-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதுகுறித்து பிரான்சின் எட்டு மறைமாவட்டங்களின் அருள்பணியாளர்கள் இக்கூட்டத்தில் சிந்தித்து வருகின்றனர்.



# வேலை மற்றும் நிலங்களை இழக்கும் பெதலகேம் மக்கள்!

**ஜெர்சிலின் டிக்ரோஸ் வத்திக்கான்**

பாலஸ்தீனிய மேற்கு கரையில் உள்ள பெத்லகேமில் வாழும் மக்களின் வேலையின்மை 31 விழுக்காடு உயர்ந்துள்ளதாகவும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எருசலேமில் உள்ள CNEWA எனப்படும் பாப்பிறை பணியகத்தின் மாநில இயக்குநர் திரு ஜோசப் ஹாஸ்பவுன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் காசாவில் இடம்பெற்று வரும் நிகழ்வுகளில் கவனம் செலுத்தி வரும் நிலையில், பாலஸ்தீனிய மேற்கு கரையில் உள்ள பெத்லகேம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல பகுதிகளின் நிலை தொடர்ந்து மோசமாகி வருவதுடன், அந்நகரம் நாளொன்றிற்கு ஏறக்குறைய 2.5 மில்லியன் டாலர் மதிப்பிலான சுற்றுலா வருமானத்தை இழந்து வருகிறது என்றும் ஹாஸ்பவுன் கூறியுள்ளார்.

அங்கு இடம்பெற்றுவரும் போர் காரணமாக பெத்லகேமின் பல கடைகள், உணவகங்கள், மற்றும் கலாச்சார நிறுவனங்கள் மூடப்பட்டு பொருளாதார இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும், வேலைவாய்ப்பைத் தேடி பெத்லகேமின் அதிகமான குடும்பங்கள் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார் அவர்.

CNEWA எனப்படும் பாப்பிறை பணியகம், தற்காலிக வேலை வாய்ப்பு மற்றும் நலவாழ்வு பராமரிப்பு உதவிகளை, அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கி வருகிறது என்றும், மேலும் இவ்வமைப்பு அரசுச் சாரா நிறுவனங்களுடன் இணைந்து, டார் அல்-கலிமா மற்றும் பெத்லகேம் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் உதவித்தொகைகள் வழங்கி வருவதாகவும் ஹாஸ்பவுன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய முக்கிய தேவையாக, புனித பூமியின் கைவினைப் பொருட்களின் கூட்டுறவுச் சங்கம் என்ற வர்த்தக அமைப்புக்கு ஒலிவ மரங்களை வாங்க உதவ வேண்டும் என்றும், இதன் மூலம் அதன் கலைஞர்கள் உலகளாவிய வணிகத்திற்காக கைவினைப் பொருட்களைத் தயாரிக்க முடியும் என்றும் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார் ஹாஸ்பவுன்.

# அமதாபாத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் பாப்பரசர் லியோ பதினான்கு இறைவனிடம் இறைவேண்டல் செய்தார்



அமதாபாத், ஜூன் 12 – லண்டனை நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் 171, அமதாபாத் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளாகி, பே.ஜே. மெடிக்கல் கல்லூரி ஹாஸ்டலைத் தாக்கியது. 242 பயணிகள் உள்ளே இருந்தனர், அவர்களில் 169 இந்தியர்கள் மற்றும் 53 இங்கிலாந்து குடியினர் அடங்குவர்.

விபத்து இடத்திலிருந்து புகை மற்றும் தீக்காடுகள் ஏற்பட்டது; மீட்புப் பணிகள் உடனே தொடங்கின. விபத்தின் காரணம் தற்போது விசாரணையில் உள்ளது.

பாப்பரசர் லியோ பதினான்கு, கார்டினல் பியட்ரோ பாரோலின் மூலம் அனுப்பிய செய்தியில், இந்த சோக நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தனது "மனமார்ந்த இரங்கல்களை" தெரிவித்தார். உயிரிழந்தோர்களின் ஆன்மாக்கள் "எல்லா வல்ல இறைவனிடத்தில் ஒப்படைப்போம்" எனவும் கூறினார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மர் ஆகியோரும் தங்கள் இரங்கலை வெளியிட்டுள்ளனர்.

இந்த பேரழிவில் பாதிக்கப்பட்ட அனைவருக்காக நாம் இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுகிறோம்.

# புனித ஜோன் மரி வியான்னி அருங்கொடை

தம்பின், புனித ஜோன் மரி வியான்னி பங்கின், தமிழ் அருங்கொடை குழுவினர் ஏற்பாட்டில் அருங்கொடை மறுமலர்ச்சி எழுச்சிக்கூட்டம் கடந்த ஜூன் 6-ஆம் 7-ஆம் திகதிகளில் தேவாலய வளாகத்தில் நடைபெற்றது.

பெந்தகோஸ்து பெருவிழாவின் தயாரிப்பாக, "நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய்" (யோவா. 11:40) என்ற கருப்பொருளோடு இந்நிகழ்வு நடைப்பெற்றது. ஆவிக்குரிய வாழ்வுக்கேற்ப கடவுளின் அன்பு, மீட்பு, கிறிஸ்துவில் புதிய வாழ்வு, தூய ஆவியாரைப் பெற்றுக் கொள்வது, ஆன்மீக வளர்ச்சியும் உருமாற்றமும் ஆகிய தலைப்புகளில் பகிர்வுகள் இடம்பெற்றன. பங்கு மக்களும் சுற்றுவட்டார பங்குகளின் மக்களும் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

முதல் நாளில் அருட்பணியாளர் ம.தேவதாசன் அவர்களின், கடவுளின் அன்பு என்ற பகிர்வுடன் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றது. இரண்டாம் நாள், மற்ற பகிர்வுகள் இடம்பெற்றன. இரவில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு குணமளிப்பும் நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டன. இடையிடையே, புகழ் ஆராதனைகளும் இடம்பெற்றன. பங்கேற்பாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.






பெயரளவில் கிறிஸ்தவ வாழ்க்கை வாழாமல், உள்ளத்தின் ஆழத்திலிருந்து இறைப்பற்றுடனும், ஜூபிலி ஆண்டில், எதிர்நோக்கின் திருப்பயணிகளாக வாழவும் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. னய ஆவியானவரின் குரலுக்குச் செவிகொடுத்துப் பழைய வாழ்க்கையை விட்டொழிந்து, புதிய வாழ்க்கை வாழவும் மீட்பு பெறவும் உருமாற்றமடைவோமாக.

ஏற்பாட்டுக்குழுவின் சார்பில் சகோதரி சி.ஜூலி ரோஸ்லின் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.





# இறை இரக்க தேவாலய பெந்துகோஸ்த்து பெருவிழாவில் உறுதிபூசுதல் அருட்சாதனம்

பெந்துகோஸ்து பெருநாளன்று, இறை இரக்க தேவாலயத்தில் சுமார் 122 மாணவர்களுக்கு கோலாலம்பூர் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் உறுதி பூசுதல் அருட்சானம் வழங்கப்பட்டது. தலைநகர் புனித யோவான் 'கெதிடரல்'-யைச் சேர்ந்த 10 மாணவர்களும், திரு செபமாலை அன்னை தேவாலயத்திலிருந்து ஒரு மாணவரும் இறை இரக்க தேவாலய மறைக்கல்வி மாணவர்கள், புகுமுக ஆயத்த கிறிஸ்துவ மாணவர்கள், உறுதிபூசுதல் அருட்சாதனத்தை இதற்கு முன் பெற்றுக் கொள்ளத் தவறிய இதர விசுவாசிகளும் இவ்வருட்சாதன திருப்பலியில் பங்குப்பெற்றனர். பங்கு குருவானவர் அருட்பணியாளர் ஜோர்ஜ் எரிக்சன், குருத்துவ படிப்பை நிறைவு செய்து, பங்கு பணியைத் தொடங்கியிருக்கும் அருட்சகோதரர் பிலிப்பு ஆசீர்வளம் ஆகியோரும் இந்த அற்புத அருட்சாதன திருப்பலியில் உடன் இருந்தனர்.

இத்திருப்பலியில் மறையுரை நிகழ்த்திய பேராயர், நமக்குள் குடிகொண்டிருக்கும் தூய ஆவியானவர் இந்த அருட்சாதனத்தின் வழி நமக்கு முத்திரையாக இருக்கப்போகிறார். இதனையடுத்து நாம் விண்ணகத்திற்கு தர அடையாளமாக (Brand) உருவெடுக்கவிருக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் எனவும், இவ்வுலகத்தில் விண்ணக சாட்சிகளாக மாறவுள்ளோம் எனவும் அறிவுறுத்தினார். இவ்வுலகில் பலதரப்பட்ட குரல்கள் இறைக்குரலைக் கேற்பதற்கு தடையாகவுள்ளது. தூய ஆவியானவர் அருளுகின்ற கொடைகளால், இனி இறைக் குரலைக் கேட்க முடியும்மெனவும், இதன் வழி விண்ணக வாழ்வுக்கானப் பாதையில் தடைகளையும் சோதனைகளையும் கடந்து செல்ல தூய ஆவியானவரே நமக்கு என்றென்றும் துணையாளராக இருப்பார் எனவும் தெளிவுப்படுத்தினார். இத்திருப்பலியில், கலந்துக்கொண்ட ஏறக்குறைய இராயிரத்திற்கும் மேற்பட்ட விசுவாசிகளில் பலர் சிவப்பு நிற உடை உடுத்தி பெந்தகோஸ்து விழாவைக் கொண்டாடினர். பெந்துகோஸ்து திருப்பலியில் கலந்துக் கொண்ட பங்கு மக்களுக்கும் வெளியிலிருந்து வருகைப் புரிந்த விசுவாசிகளுக்கும் பங்குத் தந்தை அருட்பணியாளர் ஜோர்ஜ் எரிக்சன் நன்றி தெரிவித்தார்.







# கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா

**தொநூ14: 18-20, திபா 110: 1-4, 1கொரி 11: 23-26, லூக் 9: 11-17**

## "அவர்களுக்கு நீங்களே உணவு கொடுங்கள்"

இன்று கத்தோலிக்க திருஅவை இயேசு கிறிஸ்துவின் திருவுடல். திருஇரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகிறது.

இன்றைய நற்செய்தியில் மக்கள் கிறிஸ்து இயேசுவைச் சந்திக்க பாழ்வெளியில் கூடுகின்றனர். இரவு நேரமானதும், கூடின பல்லாயிரம் பேருக்கு உணவு அளிப்பது என்பது இயலாத காரியமானதால் சீடர்கள் அவர்களை அனுப்பிவிடும் என்கின்றனர். மாறாக இயேசுவோ "நீங்களே அவர்களுக்கு உணவு தாருங்கள்" என கனிவுடன் கட்டளையிடுகிறார்.

இதிலிருந்து பசித்தோர், துயருருவோர் ஆகியோர் மீது மிகவும் மனமிருங்கும் தன்மையைக் கிறிஸ்து இயேசு கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

அங்கிருக்கும் இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் எடுத்து இறைபுகழ் கூறி ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளிக்கிறார். பசித்தோருக்கு உணவு அளித்த இறைமகன், நாமும் பசியாய் வந்தோருக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்பதை உணர்த்துகிறார். அவர்களுக்கும் உணவு அளிப்பது நமது கடமை என இதிலிருந்து அறிய முடிகிறது.

திவ்விய நற்கருணையில் நாம் பங்கெடுக்கும் போதெல்லாம் பிறருக்கும் நமது பங்கை செலுத்த வேண்டும், உதவி கரத்தை நீட்ட வேண்டும். அப்பொழுதுதான் இன்றைய வசனத்தில் கூறப்படும் "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" எனும் உயிருள்ள வாழ்வு செயல்முறையில் ஈடேரும்.

இன்றைய பெருவிழாவின் மையக் கருத்தான நமது ஆண்டவர் இயேசு தமது உடலை உணவாகவும் இரத்தமாகவும் தந்து நமது ஆன்ம பலமடைந்து இறைவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்துகிறார். இதுதான் ஒரு கிறிஸ்தவரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

பழைய ஏற்பாட்டிலே மன்னா உணவு ஒரு அடையாளமே. மன்னா ஒருவகையான இனிப்பான வெண்மைப் பூவகையைச் சார்ந்தது என்கின்றனர். பாலைவன மரங்களிலிருந்து வெளிப்பட்ட பால்போன்ற பொருள் அல்லது ஒருவகை புழுக்களின் வயிற்றிலிருந்து வெளிபட்ட இனிப்புடைய வெண்மையான உணவு என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அன்று அவர்களுக்கு மன்னா உணவு பசியை போக்கிற்று. விடுதலை பயணத்துக்கு போதுமான சக்தியைப் பெற்றனர். ஊக்கமுடன் பயணத்தை தொடர்ந்தனர்.

இன்றும் அவ்வாறே தங்களுடைய சீடத்துவ வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திக்க இயேசு தம் சீடர்களுக்கு ஊட்டம் தர தம் உடலையும் இரத்தத்தையும் உணவாக வழங்குகிறார்.

இன்று கத்தோலிக்க திருஅவை பெருவிழாவாக கொண்டாடும் இத்தினத்தில் திருஇரத்தத்தையும் திருவுடலையும் பேரன்புமிக்க ஆன்ம பானமாக தந்திருக்கும் இறைவனை நினைவில் கூறுவோம்.

திருப்பலியில் திவ்விய நற்கருணை நமக்கு ஆன்ம பானமாக அதாவது, உடல் தெம்பாகவும், ஊக்கத்துடனும், நோய் குணமாகவும், சோதனையிலிருந்து விடுபடவும், எந்த சூழ்நிலையிலும் இறைவனின் உறவிலிருந்து விடுபடாது இருக்கவும் நமக்கு பரிபூரண சொத்தாக இருப்பது திவ்விய நற்கருணையே

அன்னை திரேசாவின் வாழ்க்கையில், திருப்பலிப்பூசை முழுமனதோடு பங்கெடுத்து நற்கருணை உட்கொள்வது என்பது பக்தி மார்க்கத்தை வளர்க்கிறது என பல முறை குறிப்பிட்டுள்ளார். நற்கருணையே எனது பலம். அன்றாட பணிகளில் எனக்கு முழு பலத்தை தருவது நற்கருணையே என இயேசுவின் திருவுடலுக்கும் திருஇரத்ததிற்கும் சாட்சியம் கூறியுள்ளார்.

திருப்பலிப்பூசையில் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு பெலத்தோடும் பங்கேற்று திவ்விய நற்கருணையை உட்கொள்வோமாக.

- ஆ.வி.டேவிட்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.